*30*

# சிலுவையின் பெரிய வார்த்தைகள், 3

## 1 யோவான் 2:1, 2

*"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே ..." (1 யோவான் 2:2).*

### "நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி"

"நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி" என்ற பெரிய வார்த்தையானது ஆங்கிலத்தில் "propitiation" என்பது எழுத்து உச்சரிப்பிற்குக் கடினமானதாகவும் அடிக்கடி தவறாக உச்சரிக்கப்படுவதாகவும் உள்ள ஒரு வார்த்தையாகும். இந்த வார்த்தை ஒரு கடினமான கருத்தை முன்வைக்கிறது, ஏனென்றால் புறதெய்வ வணக்க நடைமுறைகள் அந்தக் கருத்திற்குக் களங்கம் ஏற்படுத்தி இருக்கின்றன. புறதெய்வ விக்கிரகங்கள், அமைதிப்படுத்தப்பட வேண்டிய சிறுபிள்ளைத்தனமான அபிலாஷைகளைக் கொண்டுள்ளவையாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. இயேசுவின் காலத்தில் "நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி" என்பது இரத்தபலி ஒன்றைச் செலுத்துவதினால் ஒரு விக்கிரகத்தின் கோபத்தைத் தணித்தலைக் குறிப்பிட்டது.

தேவன் இப்படிப்பட்ட உணர்வுகளைக் கொண்டிருப்பதில்லை; அவர் துன்புறும் உணர்வுகளைக் கொண்டிருக்கும் நிலைக்கும் மேலான நிலையில் இருக்கிறார். அவர் மனிதகுலத்தைத் தாம் மன்னிக்கக் கூடியவகையில் இரட்சிப்பை உண்டுபண்ணி பாவத்துடனான தமது செயல்பாடுகளில் நீதியுடன் நிலைத்திருக்கிறார். இந்த "நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியை" இயேசு தமது சொந்த பலியின் மூலமாக அளித்தார். ஒரு கருத்தமைவில், தேவன் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையைச் சுமந்தார்! இவ்வாறு அவர் நீதியுள்ளவராகவும் பாவிகளை இரட்சிக்கக்கூடியவராகவும் ஒரேவேளையில் இருக்க முடிகிறது.

மனிதன் நீதியுள்ளவனாக இருக்க வேண்டும், ஆனால் அவன் தனது பாவம் நிறைந்தநிலையின் காரணமாக, அவனால் நீதியை உண்டாக்க இயலாது. அது தேவனுடையதாக உள்ளது, ஆனால் பாவிகள்மீது தேவன் "அதை அப்படியே வழங்கிவிட" முடியாது. அதுபோலவே பாவிகளும் அளவற்ற கொடைகளைத் தேவனுக்குத் திருப்பிக்கொடுப்பதோ அல்லது லஞ்சம் கொடுப்பதோ அல்லது அவரை மனம்மகிழச்செய்வதோ முடியாது.

இயேசு நமக்காக நிறைவான, பூரணமான பலியானார். அவர் நமது மாம்சத்தை முதலிலும் பின்பு நமது பாவத்தையும் தம்மீது சுமந்தார். அவர் நமது பலியாகவும் நமது பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார் (எபிரெயர் 2:14-18). அவர் நமது கர்த்தராகவும் நமது இரட்சகராகவும் இருக்கிறார் (நடபடிகள் 2:36). அவர் நமக்குப்பதிலாகத் துன்பம் அனுபவிக்கும் நம் பலியாக - யூதத்துவ பலிகள் யாவற்றின் நிறைவேற்றமாக - இருக்கிறார். அவர் குற்றமுள்ளவராக்கப்படவில்லை; அவர் நம் பாவங்களுக்காக நமக்குப் பதிலாகப் பாவமாக்கப்பட்டார் (2 கொரிந்தியர் 5:17-21).

நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி என்பது பாவத்தின் ஏராளத்தன்மையை கட்டாயப் படுத்துகிறது. கோபம் இல்லாத அன்பு என்பது உணர்வுரீதியானதாகும். தெய்வீக கிருபை என்பது தெய்வீக கோபத்தை ஒரு தெய்வீக சுயபலியினால் திருப்திப்படுத்தியது.

## "ஈடுசெய்தல்"

பாவிகள் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ளுதல் சாத்தியமற்றது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. கிறிஸ்தவம் மாத்திரமே இயேசு என்ற இரட்சகரைக் கொண்டுள்ளது.

நிவிர்த்தி செய்தல் (ஒப்புரவாகுதலை விளையச் செய்தலுடன்) என்பது ஈடுசெய்தல் (பிராயச்சித்தம் செய்யும் செயல்) என்பதினால் சாத்தியமாக்கப்படுகிறது. நிவிர்த்தி செய்தலும் ஈடுசெய்தலும் அவற்றைப் பிரித்தறியக் கடினமாகும் அளவுக்கு மிகவும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன. நீங்கள் ஒரு பாவத்தை ஈடுசெய்கிறீர்கள் ஆனால் ஒருநபரை நீங்கள் நிவிர்த்தி செய்கிறீர்கள். ஈடுசெய்தல் என்பது ஒரு உபதேச சத்தியமாக உள்ளது; நிவிர்த்தி செய்தல் என்பது உபதேச சத்தியத்தைத் தனிப்பட்ட வகையில் செயல்முறைப்படுத்துதலாக உள்ளது. ஈடுசெய்தல், பிராயச்சித்தம் என்பது குற்றத்தை நீக்குதலாக உள்ளது; நிவிர்த்தி செய்தல் என்பது பாவத்தின் காரணமாக வந்துள்ள தெய்வீக கோபத்தை நீக்குதலாக உள்ளது.

இயேசு நமது "கிருபாசனமாக" இருக்கிறார் (ரோமர் 3:25, 26). நமது நீதி என்பது கிறிஸ்துவின் மூலமாக வருகிற விசுவாச-நீதியாக உள்ளது. இயேசுவின் இரத்தம் நமது ஈடுசெய்யும் பலியாக உள்ளது. மனிதனின் பாவம் சிலுவையில் நியாயந்தீர்க்கப்படுகிறது. ஈடுசெய்தல் என்பது தண்டத்தை, விலையைச் செலுத்துதலாக உள்ளது (1 யோவான் 2:1, 2); நிவிர்த்தி செய்தல் என்பது தேவனுடைய நீதியைத் திருப்திசெய்தலாக உள்ளது. நாம் ஒரு விலைகொடுத்து வாங்கப்பட்டோம், நீதியுள்ள தேவன், இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலமாக நீதியுள்ள தேவன், நம்மை நீதிமான்கள் என்று அறிக்கையிட்டுள்ளார். நமது பாவத்திற்காக இயேசு விலை செலுத்தியதால் நாம் மன்னிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறோம் (எபிரெயர் 2:17, 18; 1 யோவான் 4:9-11).

இயேசு நமது "பஸ்காவாக" இருக்கிறார் (1 கொரிந்தியர் 5:7). அவர் நமது பாவங்களை மூடி, அவற்றைத் தேவன் தமது பின்பக்கம் போட அனுமதித்தார் (ஏசாயா 38:17ஐக் காணவும்).

*தேவன் எரிச்சல்மிகுந்த கோபத்துடன் சிலுவையில் இருந்து விலகி, தூரத்தில் நிற்கவில்லை. அவர் நமது பரிதாப நிலையில் தம்மைத்தாமே ஈடுபடுத்தினார். அவர் கிறிஸ்துவுக்குள் நமது பாவங்களுக்கான தண்டத்தைத் தம்மீது ஏற்றுக்கொண்டார் - இதை அவர் ஒரு இயந்திரத்தனமான பதிலி யாகச் செய்யாமல், ஆழ்ந்தறிவுள்ள தனிப்பட்ட அன்புடன் செய்தார். சிலுவைமூலமாகவே தவிர, வேறு எவ்வழியிலும் தேவன் நம்மை மன்னிக் கவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாது, அதைச் செய்ய மாட்டார்.*

## *"எண்ணப்படுதல்"*

*எண்ணப்பட்ட நீதி என்பதன் கருத்து ஆழ்ந்தறிவுள்ளதாயினும் எளியதாக இருக்கிறது. பாவம் நிறைந்த மனிதன் நீதிமானாக இருக்க முடியாது; ஆகையால், நீதிமான் என்று எண்ணப்படுவது என்பது மாத்திரமே அவன் கொண்டிருக்கக்கூடிய ஒரே வகை நீதியாக உள்ளது. நீதிமானாக்கப்படுதல் என்பது "சுவிசேஷத்தின் மிக உயர்ந்த முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரை" என்று அழைக்கப்பட்டுள்ளது. மன்னிப்பின் மூலமாக, தேவன் பாவிகளை நீதியுள்ளவர்களாக அல்லது நீதிமான்களாக ஆக்குகிறார் (ரோமர் 8:1, 2).*

*எண்ணப்படுதல் என்பது இன்னொருவரின் செல்வங்கள் எனது கணக்கில் வரவு வைக்கப்படுதல் என்பதைக் குறிக்கும் ஒரு கணக்கியல் சொற்றொடராக உள்ளது. நமது பாவங்கள் கிறிஸ்துவின்மேல் சுமத்தப் பட்டன, மற்றும் பவுல் கூறியது போல, "விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை" நாம் பெறுகிறோம் (பிலிப்பியர் 3:9; ஏசாயா 53:5, 6, 10, 11; ரோமர் 4:11; 14:9; 1 பேதுரு 2:24ஐக் காணவும்). பிலிப்பியர் 3:7-11ஐ வாசித்து மறுபடியும் வாசியுங்கள். நாம் தகுதியுள்ள கிருபையைப் பெற விரும்பலாம், ஆனால் கிருபைக்கு நாம் தகுதி யானவர்களாக இருக்க இயலாது! பர்ட்டன் காஃப்மேன் என்பவர், "கிறிஸ்துவுக்குள் தேவன் மனிதர்களுக்குக் கொடுத்துள்ள இரட்சிப்பின் ஒரு சிறு துகளைக்கூட, மனிதன் பல லட்சக்கணக்கான ஆண்டுகள் நீதியுள்ள வாழ்வை வாழ்ந்தாலும் ஒருக்காலும் ஈட்ட இயலாது" என்று சரியாகவே கூறினார்.[1] மற்றும், சுமத்தப்பட்ட நீதியானது மனித மேட்டிமையை நீக்கிப் போடுகிறது. சிலுவை மாத்திரமே இரட்சிப்பில் தகுதியான ஒரே கிரியையாக உள்ளது.*

## *"மீட்கும்பொருள்"*

*நிவிர்த்தி என்பதன் நன்கு அறியப்பட்ட மற்றும் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட முகப்பு "மீட்கும்பொருள்" என்பதாகும். மீட்கும் பொருள் என்பது அடிமைகளை விடுவிக்க அவர்களை வாங்கும் கிரயம் ஆகும், மற்றும் பாவிகள் பாவத்தின் அடிமைகளாக உள்ளனர். சிலுவையில் தேவன் சாத்தானை என்றென்றைக்குமாக வாயடைத்தார் (மத்தேயு 20:28; கலாத்தியர் 3:13; 1 தீமோத்தேயு 2:5, 6; தீத்து 2:14, 15), அங்கு நம்மை*

*மீட்பதற்கு ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டது. சாத்தான் தனக்கு எதை மிகப்பெரிய வெற்றி என்று நினைத்தானோ, அதுவே அவனது கடைசித் தோல்வியாயிற்று! இயேசு நமக்காக மரித்தார் - அவரது மரணம் நமது பாவத்திற்கான கிரயமாகவும் நமது மரணத்திற்குப் பதிலியாகவும் இருந்தது. அவர் ஒரு காரணத்திற்காக வேதசாட்சியாக மரிக்கவில்லை, ஆனால் அவர் நம்மை மீட்கும்பொருளாகத் தமது ஜீவனைச் சுயாதீனமாகத் தந்தருளினார். இயேசு, பாவத்தை மன்னிக்கப்படக் கூடியதாகவும் மனிதரை இரட்சிக்கப்படக்கூடியவர்களாகவும் ஆக்கினார். அல்லேலூயா, நமது மீட்பர் ஜீவிக்கிறார்!*

*யாருக்கு இந்த மீட்கும்பொருள் செலுத்தப்பட்டது? தேவன் சாத்தானிடமிருந்து பாவிகளைத் திரும்பவும் வாங்கிக் கொள்ளவில்லை. தேவன் எவர் ஒருவருடனும் உடன்பாடு செய்வதில்லை! நாம் "பாவத்திற்குக்கீழாக விற்கப்பட்டோம்" (ரோமர் 7:14), ஆனால் நாம் சாத்தானிடம் விற்கப்படவில்லை. தேவன்தான் சிலுவையில் திருப்தியாயிருந்தார், சாத்தான் அல்ல (1 யோவான் 2:1, 2). சாத்தான் "குற்றஞ்சாட்டுகிறவனாயிருக்கிறான்" (வெளிப்படுத்தின விசேஷம் 12:9, 10). பாவத்தைத் தண்டியாமல் தேவன் பரிசுத்தராய் இருக்க முடியாது. பாவத்திற்கான தண்டனை செலுத்தப்பட்டாக வேண்டும்.*

*மீட்கும்பொருள் சமூகத்திற்குத் தரப்படவில்லை. சமூகமானது பாவத்தைக் கையாளச் சட்டம் அல்லது நீதிமன்றத்தைக் கொண்டிருப்பதில்லை.தேவனுடைய நீதியையும் பரிசுத்த தன்மையையும் திருப்திப்படுத்தவே மீட்கும்பொருள் செலுத்தப்பட்டது. மீட்கும்பொருள் செலுத்தப்பட்டதன்பேரில் கடன்பெறுபவர் முற்றிலும் சொந்தமாக்கப்படுகிறார். மீட்கும்பொருள் என்பது பாவத்தின் அவமானத்திற்குத் திருப்தி செய்தலாக உள்ளது. சட்டத்தின் தண்டம் செலுத்தப்பட்டுள்ளது (ரோமர் 6:23) மற்றும் தூய்மை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மீட்கும்பொருளானது பாவத்தின் தீவிரத்தன்மையை வெளிப்படுத்துகிறது. நாம் சுவிசேஷத்தை விசுவாசித்து கீழ்ப்படியும்போது இரட்சிப்பு நமக்குக் கொடையாக அருளப்படுகிறது. இயேசு, சாத்தானை அரியணையில் இருந்து வீழ்த்தியது மட்டுமின்றி, அவர் பாவத்தையும் கையாண்டார். இயேசு பாவத்தை வெற்றி கொண்டதின் மூலம் அவர் மரணத்தையும் வெற்றிகொண்டார். அவரது கிருபையின் அற்புதம் இல்லையென்றால் பாவக்கடன் தீர்க்கப்பட முடியாததாகவே இருந்திருக்கும்.*

*மீட்கப்பட்டவர்கள், மீட்பு என்றால் என்ன என்பதை மறக்காதிருக்க வேண்டும்.*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 122.